இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

**குற்றவியல் மேல்முறையீடு எண் 1193/2011**

சந்துரு என்கிற சந்திரசேகரன் .....மேல்முறையீட்டாளர்(கள்)

எதிர்

அரசு சார்பாக துணை காவல்துறை கண்காணிப்பாளர்,

சி.பி.சி.ஐ.டி. மற்றும் ஒருவர் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

**குற்றவியல் மேல்முறையீடு எண்253/2019**

**(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 2306/2011 லிருந்து எழுகிறது.**

**தீர்ப்புரை**

**மாண்புமிகு நீதியரசர் திரு.தீபக் குப்தா**

1. சி.அ.ம.(குற்ற.) எண் 2306/2011- இலிருந்து எழுகின்ற மேல்முறையீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2. இரு மேல்முறையீடுகளும் பொது தீர்ப்புரை மூலம் முடிவு செய்யப்பட்டுள்ளன.

3. மறுப்பிற்கிடமற்ற பொருண்மைகளாவன, மரணமடைந்த அருண், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவா என்கிற சிவபிரகாஷின் நண்பராவார். மரணமடைந்தவர், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான சந்துரு என்கிற சந்திரசேகரன் ஆகியோருடன் சேர்ந்து, 30.10.2004 அன்று சென்னைக்கு பிரயாணம் செய்தார்.அவர்கள், இரவு சுமார் 9.00 மணிக்கு எம்.ஷேக் தாவூத்(அ.சா.3)-ஆல் நடத்தப்பட்டுவரும் மீனா விருந்தினர் இல்லத்திற்குச் சென்றனர், அங்கு, அவர்களுக்கு அறை எண் 203 ஒதுக்கப்பட்டது.இரவு சுமார் 9.30 மணியளவில் வெங்கடேஷ் என்கிற

வெங்கி அந்த அறைக்கு வந்தார். வெங்கி மரணமடைந்தவரான அருணின் இடது மணிக்கட்டில் 4 மி.லி. டிடிஜெசிக் மருந்தை ஊசி மூலம் செலுத்தினார். வெங்கியும் 2 மி.லி. மருந்தை எடுத்துக்கொண்டார். அதன்பிறகு, வெங்கி விருந்தினர் இல்லத்தைவிட்டுச் சென்றார். அடுத்த நாள் காலை, அதாவது, 31.10.2004 அன்று அருண் எழுந்திருக்காததால் இதிலுள்ள இரு மேல்முறையீட்டாளர்களும் வெங்கியை அழைத்தனர்.விடுதி அறையின் உதவியாளரான சங்கர் (அ.சா.4) விடுதியின் மேலாளரிடம் முறையிட்டதும், நிறையபேர் 203-ஆவது அறைக்கு வந்தனர். அருண் இறந்துவிட்டதாக அறியப்பட்டது. அதன்பிறகு, மரணமடைந்த அருணின் தந்தையாரால் சொந்தமாக நடத்திவரப்படும் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்துவரும் இக்பால் (அ.சா.2)-ம், மரணமடைந்தவரின் தாய்வழிமாமா பொன்சேகர் (அ.சா.1)-ம் அறைக்கு வந்தனர்.

4. அ.சா.1, தனது சகோதரி மகனான அருண் முன்னதாக சென்னையிலுள்ள பொறியியல் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான் என்றும், அவன் சரியாகப் படிக்காததாலும், சில தீய பழக்கவழக்கங்களுக்கு ஆளானதாலும், அவன் தூத்துக்குடியிலுள்ள கல்லூரிக்கு மாற்றப்பட்டான் என்றும் கூறி, 31.10.2004 அன்று காலை 9.45 மணியளவில் புகார் ஒன்றைத் தாக்கல் செய்தார்.31.10.2004 அன்று காலை சுமார் 7.30 மணியளவில், மீனா விருந்தினர் இல்லத்தின் அறை எண் 203-இல் இரவு தங்கியிருந்த தன்னுடைய சகோதரியின் மகனான அருண் ஊசிமூலம் அதிகப்படியான போதை மருந்தை உட்செலுத்திக் கொண்டு, உணர்விழந்துவிட்டார் என தன்னிடம் தெரிவித்து இக்பால் (அ.சா.2)-யிடமிருந்து ஓர் அழைப்புவந்தது என்பதாக புகாரின் தொடர்புடைய பகுதி இருந்தது.அவர் உடனடியாக விருந்தினர் இல்லத்திற்குச் சென்றார், அங்கு தன்னுடைய சகோதரியின் மகன் இறந்துகிடந்ததைக் கண்டார். அதன் பிறகு, அவர் திருவல்லிக்கேணி காவல்நிலையத்திற்குச் சென்று, அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்தார்.

5. மேற்சொன்ன அறிக்கையின் அடிப்படையில், குற்ற எண் 1150/2004 என்பதான ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மரணமடைந்தவரின் உடல்

சடலக்கூறாய்வுக்கு அனுப்பப்பட்டது. மருத்துவர் ஏ.என்.சண்முகம் (அ.சா.6) சடலக் கூறாய்வு செய்தார்.இறப்புக்கான காரணம் என்ன என்பதை தான் உறுதியாகச் சொல்லமுடியாது என்றும், ஆனால், மருந்து உட்செலுத்தியதன் மூலம் மரணம் ஏற்பட வாய்ப்பிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். அக்குற்றம் தொடர்பாக வெங்கி கைது செய்யப்பட்டார் மற்றும் அவர், 08.11.2004 அன்று காவல் துறையினரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டது, அது, டிடிஜெசிக் மருந்தூசி, காலி ஊசி மருந்தினை உட்செலுத்தும் கண்ணாடிச் சிமிழ்கள், பயன்படுத்தப்படாத டிடிஜெசிக் மருந்தினை உட்செலுத்தும் கண்ணாடிச் சிமிழ்கள், இன்னும் பிறவற்றைக் கண்டெடுப்பதற்கு வழிகோலியது. மரணமடைந்தவரின் தாய்மாமனான அ.சா.1, வழக்கு விசாரணை செய்யப்படும் முறையில் தான் திருப்தியடையாததால், புலனாய்வை வேறேதேனும் முகமைக்கு மாற்றக்கோரி, 2005-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் 28.02.2005-ஆம் தேதியிட்ட உத்தரவு மூலம் புலனாய்வை, தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவுக்கு (சி.பி.சி.ஐ.டி.) மாற்றியது. காவல்துறையினரின் முன்பாக மூன்று சந்தேகத்திற்குரியவர்களான வெங்கடேஷ் என்கிற வெங்கி, சிவபிரகாஷ் என்கிற சிவா மற்றும் சந்திரசேகரன் என்கிற சந்துரு இருந்தனர். இம்மூவரும், தடய அறிவியல் ஆய்வகத்தில் உடலியல் மாற்றம் அறியும் கருவி (polygraph), மூளைச் செயல்பாடு வரைவு (Brain mapping) மற்றும் மயக்க நிலை சோதனைகள் (Narco analysis tests) ஆகியவற்றிற்குட்படுத்தப்பட்டனர். புலனாய்வை மேற்கொண்ட புலனாய்வு அலுவலரின் (எ.சா.4) கூற்றுப்படி, இதிலுள்ள இரண்டு மேல்முறையீட்டாளர்களும் மேற்கண்ட சோதனைகளைக் கடந்து வந்தனர், மேலும், அவர்களிடம் ஏமாற்றும் அறிகுறிகள் தென்படாததால் அவர்கள்மீது எந்த ஐயப்பாடுமில்லை என்பதாகும். எனினும், சோதனைகளின் போது, வெங்கியின் பதில்கள் ஏமாற்றும் விதமாக இருந்தன எனக் கண்டறியப்பட்டன.

6. 2006-ஆம் ஆண்டில், மரணமடைந்தவரின் தந்தை, வழக்கின் புலனாய்வை, மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றுவதற்காக மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இம்மனு, உயர் நீதிமன்றத்தால் 08.02.2008-ஆம் தேதியன்று நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், சம்பவம் நடந்து மூன்றாண்டுகள் கழித்து 23.01.2008-ஆம் தேதியன்று, குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவு (சி.பி.சி.ஐ.டி.)-ஆல், இந்திய தண்டனைச் சட்டத்தின் (சுருக்கமாக'இ.த.ச.') பிரிவு 304, பகுதி II-இன் கீழ் வெங்கடேஷ் என்கிற வெங்கிக்கு எதிராக மட்டும் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் (சுருக்கமாக'கு.வி.மு.ச.') பிரிவு 173-இன் கீழ் குற்ற அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. தற்போதைய குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் (இதிலுள்ள மேல்முறையீட்டாளர்கள்) மேற்படி குற்ற அறிக்கையில் அரசுத்தரப்பு சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டனர். வெங்கி, குற்ற அறிக்கையைத் தாக்கல் செய்த பிறகு, அதாவது, 21.07.2008-ஆம் தேதியன்றான வழக்கு விசாரணைக்கு முன்பாக இறந்துவிட்டார்.

7. அதற்குப்பிறகு தான், மரணமடைந்தவரின் தாய்மாமா அ.சா.1, நீதிமன்றம் முன்பாக தனி புகார் ஒன்றைத் தாக்கல் செய்தார், அது அ.சா.ஆ.1 ஆகும். இரண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களும், மரணமடைந்தவரும் அறை எண் 203-இல் தங்கியிருந்தனர் என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவரான சந்துரு அழைத்ததன் பேரில் வெங்கி அறைக்கு வந்தார் என்றும், வெங்கி போதை மருந்தை சில்லறைக்கு விற்பனை செய்பவர் என்றும், அருண் போதை மருந்து எடுத்துக் கொள்ளும் பழக்கமில்லாதவர் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவரின் வேண்டுகோளின் பேரில் வெங்கி, 4மி.லி டிடி ஜெசிக் ஊசி மருந்தை, மரணமடைந்தவரின் இடதுகை மணிக்கட்டில் உட்செலுத்தியுள்ளார். குற்றம் சாட்டப்பட்டவரான சிவா, வெங்கியின் இச்சேவைகளுக்கு ரூ.50/-ஐ அவருக்கு கொடுத்தார் என்றும் சொல்லப்பட்டது. இப்புகாரின்படி, அருணுக்கு இரண்டாவது தடவையாக இடது முன்கையின் உள்பகுதியில் ஊசிமருந்து உட்செலுத்தப்பட்டது. இச்சாட்சி, அறை எண் 203-க்கு சென்றபோது, வெங்கி அங்கிருந்தார் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் அதிகப்படியான போதை மருந்துகளை இடது

முன்கையின் உள்பகுதியில் செலுத்தியதன் காரணமாக, மரணமடைந்தவர் இறந்துவிட்டார் என்று புகார்தாரரிடம் கூறினார். அவர் 31.10.2004 அன்று விருந்தினர் இல்லத்திற்குச் சென்றபின்னர், உடனடியாக திருவல்லிக்கேணி காவல்நிலையத்திற்குச் சென்றார், அங்கு காவல்துறையினர் இரு வெற்றுத்தாள்களில் அவருடைய கையொப்பங்களை வலுக்கட்டாயமாகப் பெற்றுக் கொண்டனர் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.மு.த.அ.-ஆனது இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு மறைமுக ஆதரவளித்து காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. இரு மருந்தூசிகள் குத்தப்பட்ட அடையாளங்கள் இருந்தன என்றும், தடய அறிவியல் ஆய்வக அறிக்கையின்படி, பெருமளவிலான போதைப் பொருள் மரணமடைந்தவருக்கு உட்செலுத்தப்பட்டதால், அது அவருக்கு மரணத்தை விளைவித்தது என்றும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவா, அ.சா.10-இன் (இதில் இதற்குப் பிறகு 'ஆர்'எனக் குறிப்பிடப்படுவார்) நெருங்கிய கூட்டாளி என்று இப்புகாரில் சொல்லப்பட்டுள்ளது. புகார்தாரரின் கூற்றுப்படி, மரணமடைந்தவருக்கு ஆர் (அ.சா.10) அறிமுகப்படுத்தப்பட்டார்; அவர்கள் தினந்தோறும் தொலைபேசியில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது வழக்கம்; ஆகவே, குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவா, தனது பெண் தோழி வேறு ஏதோ ஒருநபரிடம் அவளுடைய விசுவாசத்தைக் காட்டியதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.ஆகவே, அவர், மருத்துவ கல்லூரி மாணவரான சந்துருவை அணுகி, அவரது உதவியுடன், அருணை கொல்லும் எண்ணத்துடன் அதிக அளவு டிடிஜெசிக் மருந்தை ஊசி மூலம் உட்செலுத்திவிட்டார் என்பதாகும்.

8. தனி புகாரைத் தாக்கல் செய்த பிறகு, பெருநகர குற்றவியல் நடுவர் ஏழு சாட்சிகளின் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் வழக்கை விசாரணை செய்வதற்கு போதுமான காரணங்கள் இருப்பதாகக் கண்டறிந்தார். அதன்பிறகு, வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்மீது குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன, அவர்கள் குற்றமற்றவர்கள் என வாதிட்டனர்.குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் நான்கு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை நீதிமன்றம், இ.த.ச.,பிரிவு

302 உடன் இ.த.ச.,பிரிவு 120-பி-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை தண்டித்து, அவர்களுக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதித்தது. மனக்குறையுற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இரண்டு தனித் தனியான குற்றவியல் மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தனர், அவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

9. ஒப்புக்கொண்ட வகையில், இவ்வழக்கிற்கு கண்ணுற்ற சாட்சிகள் எவருமில்லை, இது சூழ்நிலைச் சான்றின் அடிப்படையிலான வழக்காகும். சூழ்நிலைச் சான்று மதிப்பீடு தொடர்பான சட்டம், **உறனுமந்த்-எதிர்-மத்தியப் பிரதேச மாநில அரசு, ஏ.ஐ.ஆர். 1952 எஸ்.சி.343: எல்.என்.ஐ.என்.டி.1952 எஸ்.சி.48:(1952)2 எம்.எல்.ஜெ.631** என்ற வழக்கில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்மானித்துள்ளது:

> "10....சான்றானது, சூழ்நிலையின் தன்மைக்கேற்ப இருக்கும் வழக்குகளில், குற்றத்தை முடிவுசெய்யும் சூழ்நிலைகளை எடுத்துக்கொண்டு, அவை, முதல்நோக்கிலேயே முழுமையாக நிலைநாட்டப்பட வேண்டும், அவ்வாறு நிலை நாட்டப்பட்ட பொருண்மைகள் யாவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் செய்ததாகச் சொல்லப்படும் புனைவுக் கருத்துடன்தான் ஒத்துப்போகவேண்டும்.மீண்டும், சூழ்நிலைகள், அறுதிசெய்யும் பாங்குடையதாகவும், தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும், மேலும், அவை நிரூபிக்கப்பட வேண்டியதாகச் சொல்லப்பட்ட சூழ்நிலையைத் தவிர, ஒவ்வொரு புனைவுக் கருத்தையும் நீக்கும் படியாக இருக்க வேண்டும்.அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றமற்றத் தன்மையுடன் ஒத்துப்போகும் முடிவுக்கான நியாயமான காரணம் எதையும் விட்டுவிடாமலிருக்கும் பொருட்டு, சான்றுகளின் தொடர் முழுமை பெற்றிருக்க வேண்டும் மற்றும் அனைத்து மனிதர்களும் செய்யக் கூடிய செயல்களுக்குட்பட்டுதான் குற்றஞ்சாட்டப்பட்டவராலும் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பதையும் அவ்வகையிலேயே காண்பிக்க வேண்டும்.

10. இச்சட்டமானது, தொடர் தீர்வறிக்கைகளில் திரும்பத்திரும்ப இணக்கமுற பின்பற்றப்பட்டுள்ளது. அனைத்து தீர்வறிக்கைகளையும் குறிப்பிடுவதென்பது தேவையற்றது. எனினும், நாம், சர் ஆல்பிரட் வில்ஸ் **என்பவரின் வில்ஸின் சூழ்நிலைச்சான்று** (பட்டர்வொர்த்ஸ், ஏழாவதுபதிப்பு,பக்கங்கள்296-329) என்ற புத்தகத்தில் அத்தியாயம் VI-இல், அவர், சூழ்நிலைச் சான்று தொடர்பான வழக்குகளில் குறிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளை வகுத்துரைத்துள்ளதைக் குறிப்பிடலாம், அவை பின்வருமாறு:

> விதி 1:-சட்ட அனுமானம் எதனடிப்படையிலும் சொல்லப்படும் பொருண்மைகள், அறுதி செய்வதற்குரிய பொருண்மையுடன் தொடர்புற்று, நியாயமான சந்தேகத்திற்கப்பால் தெளிவாக நிரூபிக்கப்பட வேண்டும்...
>
> விதி 2:-சட்டப்படியான முடிவுக்கு வரச்செய்யும் பொருண்மை ஏதுமுள்ளதென உறுதி செய்கிற தரப்பினர் மீது தான் மெய்ப்பிக்கும் பொறுப்பு எப்போதுமிருக்கிறது....
>
> விதி 3:-நேரடியான அல்லது சூழ்நிலைச்சான்று தொடர்பான வழக்குகள் யாவற்றிலும், வழக்கின் தன்மைக்கேற்ப சிறந்த சான்றளிக்கப்பட வேண்டும்.
>
> விதி 4:-குற்றமுடையவர் எனும் முடிவை நியாயப்படுத்தும் பொருட்டு, குற்றத்தை நிலைநாட்டும் பொருண்மைகள், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றமற்றத்தன்மைக்கு மாறானதாகவும், அவருடைய குற்றத்தன்மைக்கு அப்பாற்பட்ட வேறேதேனும் நியாயமான அனுமானத்தின் பேரில் விளக்கமளிக்க இயலாமலும் இருக்கவேண்டும்.....
>
> விதி 5:-குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தில் ஏதேனும் நியாயமான சந்தேகமிருந்தாலும், அவர் விடுவிக்கப்படவேண்டிய உரிமையைப் பெறத் தகுதியுடையவராவார்."

11.சட்டமானது, பின்வரும் வாசகங்களில் சுருக்கமாகக் கூறப்படலாம்:

1. குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை அனுமானிக்க வழிகோலும் அரசுத்தரப்பால் சார்வுறப்படும் சூழ்நிலைகள் சந்தேகத்திற்கப்பால் மெய்ப்பிக்கப்பட வேண்டும்;

2. சூழ்நிலைகள், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவறின்றி சுட்டிக் காட்ட வேண்டும்;

3. குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீதான குற்றம் எனும் ஒரேயொரு முடிவுக்கு வழிகோலுகின்ற சூழ்நிலைகளை, ஒரு சங்கிலித் தொடர் போன்றதொரு அமைப்பில் இணைத்து, அவை அவ்வாறு முழுமைபெறும்படியானதொரு முறையில் ஒன்றாக இணைக்கப்படவேண்டும்;

4. குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தவிர, வேறெந்த நபராலும் குற்றம் புரியப்பட்டிருக்கும் சாத்தியம் இருக்கக் கூடாது.

12. மேற்சொன்ன சட்டத்தின் உதவியோடு, நாம் கீழமை நீதிமன்றங்களால் சார்வுறப்பட்ட சட்டத்தையும், சூழ்நிலைகளையும் பரிசீலிக்கவேண்டும்.

13. சூழ்நிலைச் சான்றின் அடிப்படையிலான ஒரு வழக்கில் நீதிமன்றங்கள் ஒவ்வொரு சூழ்நிலையையும் தனித்தனியாக கையாண்டு, முடிவெடுப்பதற்கு, மெய்ப்பிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளை இணைப்பது எப்போதும் சிறப்புடையதாயிருக்கும். இவ்வழக்கில் துரதிருஷ்டவசமாக, சில சூழ்நிலைகளைக் குறித்து குறிப்பிட்டுள்ளபோதிலும், சூழ்நிலைகள் தனித்தனியாக விவாதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நாங்கள் அரசுத்தரப்பால் சார்வுறப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளை விவாதிப்பதற்கு எண்ணுகிறோம்:

**1.<u>கடைசியாக ஒன்றாகப் பார்த்தல் -</u>**

இச்சூழ்நிலையைப் பொறுத்தவரை, இது மெய்ப்பிக்கப்பட வேண்டும். அனைத்து வழக்கு விவரமாவது, மீனா விருந்தினர் இல்லத்தின் அறை எண்203-ஐ இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், மரணமடைந்தவரும் வாடகைக்கு எடுத்திருந்தனர். வெங்கி, இரவு சுமார் 9.30 மணிக்கு வந்து, இரவு 10.15-க்கு சென்று விட்டார். அதன் பிறகு விடுதி பூட்டப்பட்டது. ஆகவே, இச்சூழ்நிலை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.இச்சூழ்நிலை மெய்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எச்சூழ்நிலையில் மரணமடைந்தவருடன் கடைசியாகக் காணப்பட்டனர் என்பதையும் நாம் ஆராயவேண்டும்.அரசுத்தரப்பின் வழக்காவது, ஆர்(அ.சா.10) மரணமடைந்தவருடன் தொடர்புவைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவா சந்தேகமடைந்ததால், மரணமடைந்தவரை கொல்லும் நோக்கத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் அவரை அறைக்கு கொண்டு சென்றார்.எனினும், குற்றஞ்சாட்டப்பட்டவர் சென்னையை அடைந்து, கேள்விக்கிடமான விருந்தினர் இல்லத்திற்கு சென்றார் என்பது முற்றிலும் வேறுபட்ட ஒரு கதையை எடுத்துரைக்கிறது.30.10.2004 அன்று இரவு மரணமடைந்த அருண் தனது நண்பர் சித்தார்த்துடன், அ.சா.1-உடன் தங்குவதற்கு சென்னைக்கு வந்திருப்பதாக அ.சா.5-இன் பணியாளரான ஜெயராஜ் என்பவர் தொலைபேசியில் இரவு சுமார் 6.00/7.00 மணிக்கு தன்னிடம் தெரிவித்ததாக மரணமடைந்தவரின் தாய்மாமா (அ.சா.1) கூறியுள்ளார். சில நிமிடங்கள் கழித்து, அ.சா.1 தனது சகோதரியின் மகன் அருணுடன் பேசியதில், அவன் அவருடைய மாமாவின் வீட்டிற்கு வருவதாக கூறியிருந்தான், ஆனால், அவன் வரவில்லை.சித்தார்த் என்பவர் கோமதி பாண்டியன் (அ.சா.7) என்பவரின் மகனாவார். அவரது கூற்றுப்படி, சித்தார்த், தனது நண்பன் அருணுடன் (மரணமடைந்தவர்) சில துணிமணிகள் வாங்குவதற்கு சென்னைக்கு செல்வதாகக் கூறினான், அவர், தனது மகனை அவனுடைய நண்பனுடன் அனுப்புவதற்கு தயக்கம் கொண்டதால்,அவர் அருணுடன் பேசியதாகவும், அருண், தாங்கள் பேருந்தில் சென்னைக்கு செல்வதாகவும், சித்தார்த்தை தன்னுடன் அனுப்பிவைப்பதற்கு

அவரை இணங்கச் செய்ததாகவும் கூறினார். அவர் சித்தார்த்தை பேருந்து நிலையத்தில் விட்டார். அவருடைய மகன் சித்தார்த், சென்னைக்கு மரணமடைந்த அருண் மற்றும் மூவருடன் ஒரு சீருந்தில் சென்றதையும், அது விபத்துக்குள்ளானதையும் பின்னர் அவர் தெரிந்துகொண்டார்.கலாதேவியின் மகன் மாதேஷும் அதே சீருந்தில் பயணம் செய்தான் மற்றும் விபத்து குறித்து கலாதேவி (அ.சா.8)-ஆல் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.அருண்தான் சித்தார்த்தை தன்னுடன் அனுப்பிவைக்குமாறு சித்தார்த்தின் தாயாரை இணங்கச்செய்தார் என்பது இவ்வாறாக தெளிவாகிறது.சீருந்து விபத்துக்குள்ளானது என்று தனது மகன் பின்னர் தன்னிடம் தெரிவித்ததாகவும், அதன் பிறகு சித்தார்த்தும், மாதேஷும் சென்னைக்கு செல்லாமல் தத்தமது வீட்டிற்கு திரும்பி வந்து விட்டனர் என்றும் இச்சாட்சி (அ.சா.7) கூறியுள்ளார். அ.சா.8, தனது மகன் மாதேஷ் கோயம்புத்தூருக்கு செல்வதாக தன்னிடம் கூறினான் என்றும், அடுத்த நாள் காலை தனது சகோதரனின் மகனிடமிருந்து தனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது என்றும், மாதேஷ் பயணம் செய்த சீருந்து விபத்துக்குள்ளானது என தன்னிடம் அவன் கூறினான் என்றும், மேலும், மாதேஷ் தனது நண்பர்களான சிவா, சந்துரு, சித்தார்த் மற்றும் அருண் ஆகியோருடன் தனது சகோதரனின் வீட்டிற்கு வந்ததாகவும் தன்னிடம் தெரிவிக்கப்பட்டது என்றும், அதன் பிறகு மாதேஷ் வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டான் என்றும் கூறியுள்ளார். இதன்மூலம் சித்தார்த்தும், மாதேஷும் சீருந்தில் பயணம் மேற்கொண்டு, சென்னைக்கு செல்லவேண்டியவர்களே, ஆனால் அதற்குள்ளாக சீருந்து விபத்துக்குள்ளாகிவிட்டது என்ற பொருண்மை தெளிவாக தெரியவருகிறது. அதன் பிறகு, சித்தார்த்தும், மாதேஷும் மேற்கொண்டு செல்லாமல், தத்தமது வீட்டிற்கு திரும்பி வந்து விட்டனர்.அவ்வகையில் இப்பயணத்தை ஏற்பாடு செய்தவர் மரணமடைந்தவரேயன்றி, குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லர் என்பது தெளிவாகிறது, ஆகவே, குற்றம் சாட்டப்பட்டவர், மரணமடைந்தவரை கொல்லும் எண்ணத்துடன் விருந்தினர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார் என்று சொல்லமுடியாது. இரு கீழமை நீதிமன்றங்களால் செய்யப்பட்ட அனுமானத்திற்கு சான்றாதாரம் ஏதுமில்லை.

**2.<u>மருத்துவச் சான்று -</u>**

இவ்வழக்கில் மரணமடைந்தவர் டிடிஜெசிக் மருந்தை அதிகளவு எடுத்துக் கொண்டதன் காரணமாக இறந்தார் என்பதை முன்வைக்கப்பட்ட மருத்துவச்சான்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. 2 மி.லி.டிடி ஜெசிக்கை கொடுத்த வெங்கியால் மரணமடைந்தவரின் மணிக்கட்டில் 4 மி.லி.டிடி ஜெசிக் ஊசி மூலம் உட்செலுத்தப்பட்டு, அவர் இறந்துவிட்டார் என்பது மறுத்துரைக்கப்படவில்லை.மரணமடைந்தவரின் இரத்தத்தில் காணப்பட்ட தீங்கு தரத்தக்க பொருளின் அளவு, 40 மி.லி.டிடி ஜெசிக்கை உட்செலுத்தியதற்குச் சமம் என இரசாயன பகுப்பாய்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்டுள்ளதாக சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சட்ட மற்றும் தடயவியல் மருத்துவத் துறைத் தலைவரும், பேராசிரியருமான, மருத்துவர் ஆர்.பாஸ்கரன் (அ.சா.11)-இன் சாட்சியம் தெளிவாகக் காண்பிக்கிறது. ஆகவே, மரணமடைந்தவர் அதிகளவு போதை மருந்து எடுத்துக்கொண்டதன் காரணமாக இறந்துவிட்டார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

20 மி.லி.டிடி ஜெசிக் மருந்தூசி பயன்படுத்தப்படுமானால், 40 மி.லி.டிடி ஜெசிக்கை இரண்டு தடவையாக உட்செலுத்தலாம்; இருப்பினும், 5மி.லி. மருந்தூசி பயன்படுத்தப்படுமானால், 8 முதல் 10 தடவையாக செலுத்த வேண்டியிருக்கும் என அ.சா.11 தெரிவித்தார். இந்த 40 மி.லி.டிடி ஜெசிக் எப்போது மற்றும் எப்படி மரணமடைந்தவரின் உடலில் உட்செலுத்தப்பட்டது என தான் சொல்ல இயலாது என்பதை அவர் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர், மரணம் எந்த நேரத்தில் நிகழ்ந்தது எனவும் தெரிவிக்கவில்லை. மருந்து வேலை செய்ய 6 முதல் 24 மணி நேரங்கள் எடுத்துக் கொள்ளும் என்றும், மேலும், அது, மருந்தின் அளவு, உட்செலுத்திக்கொள்ளும் நபரின் உடற்கூறு மற்றும் செயல்பாடுகளைப் பொறுத்திருக்கும் எனவும் கூறியுள்ளார்.மருந்து மரணமடைந்தவரின் உடலில் ஊசி மூலம் உட்செலுத்தப்பட்டதில், மரணம் நிகழ்ந்த நேரம் குறித்தோ அல்லது எத்தனை தடவை செலுத்தப்பட்டது என்பது குறித்தோ அவரது வாக்குமூலம் எங்களுக்கு எந்த உதவியும் புரியவில்லை. சடலக்கூறாய்வு அறிக்கையிலும் இறப்பு நிகழ்ந்த நேரம் குறித்து தோராயமாகக் கூட

குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. சடலக்கூறாய்வு செய்தவரான மருத்துவர் ஏ.என்.சண்முகமும் (அ.சா.6) அவர்களால் இறப்பு எப்போது நிகழ்ந்தது குறித்து ஏதும் சொல்ல இயலவில்லை.

மருந்தை ஊசி மூலம் உட்செலுத்தியதால் ஏற்பட்ட காயங்கள், முன்னங்கை, முன்பாத கணுக்கால், முன்னங்கையின் முன் மற்றும் நடுப்பகுதி ஆகியவற்றில் காணப்பட்டன என மருத்துவர் ஏ.என்.சண்முகம் (அ.சா.6) தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார். அவர், சடலக் கூறாய்வு அறிக்கையில் (பி.டி.5)-இல் இரு ஊசியிட்ட அடையாளக் குறிகள் மட்டுமே இருந்தன - ஒன்று இடது முழங்கை மூட்டின் முன்பக்கமும், மற்றொன்று இடது முன்னங்கையின் நடுப்பகுதியில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதை மறுத்துரைத்தார்.உடலில் உள் அல்லது வெளிக் காயங்கள் ஏதும் வேறெங்கும் காணப்படவில்லையெனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஏன் சடலக்கூறாய்வு அறிக்கையில் மற்ற காயங்கள் குறித்து குறிப்பிடவில்லை என்பதற்கு உரிய விளக்கம் கொடுக்கவில்லை. மரணமடைந்தவருக்கு இரண்டுமுறைதான் ஊசியிடப்பட்டது என்பதைத்தான் இது குறிப்பிடுகிறது.

அரசுத்தரப்பின் வழக்காவது, மரணமடைந்தவருக்கு முதல் தடவை 4 மி.லி.டிடிஜெசிக் உட்செலுத்தப்பட்டது. ஆகவே அடுத்த முறை ஒரேயடியாக 36 மி.லி.யை உட்செலுத்தியிருக்க முடியாது. காவல்துறையினர், அறையிலிருந்து மருந்தூசி அல்லது வேறு பொருள் எதனையும் கைப்பற்றவில்லை என்பதாகும். அரசுத்தரப்பு வழக்கின்படி, விடுதி இரவு சுமார் 10.30 மணிக்கு பூட்டப்பட்டது. அடுத்த நாள் காலை மரணமடைந்தவர் இறந்து கிடந்தது கண்டறியப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்தோ அல்லது அவர்களை குற்றத்துடன் தொடர்புபடுத்த அவர்கள் குறிப்பிட்டபடியாக ஊசி மருந்தினை உட்செலுத்தும் கண்ணாடிச் சிமிழ்களோ அல்லது மருந்தூசியோ எவையும் கைப்பற்றப்படவில்லை.

அரசுத்தரப்பு மேற்சொன்ன மருத்துவச் சான்றின்மூலம் மரணமடைந்தவரின் இறப்புகுறித்த குற்றத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவரை இணைக்கத் தவறிவிட்டது. அரசுத்தரப்பு இறந்தவரின் இறப்பு குறித்த சரியான நேரத்தை நிரூபிக்கத் தவறிவிட்டது. இறந்தவருக்கு இரவு 9.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக முதல் ஊசி மூலம் மருந்து உட்செலுத்தப்பட்டது.மருத்துவரின் கூற்றுப்படி, மருந்தின் விளைவு சுமார் ஆறு மணி நேரங்களில் முடிந்துவிடக்கூடும். ஆகவே, இறந்தவர் நடு இரவில் எழுந்து, தானே ஊசியை இட்டுக் கொள்வதற்கான சாத்தியக்கூறையும் விலக்க இயலாது. வேறெவரையும் அழைத்து தனக்கு ஊசி மூலம் மருந்தை செலுத்தச் சொல்வதற்கான சாத்தியமும் உள்ளது. மிக முக்கியமாக, போதை மருந்தின் மீதி 36 மி.லி. எங்கிருந்து வந்தது; இந்த மருந்தை யார், எப்போது கொண்டுவந்தனர் என்பதை நிரூபிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தான் இம்மருந்தை வாங்கினர் என்பதற்கு சான்றேதுமில்லை. அவர்களிடமிருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை, ஆகவே, இறந்தவர் போதை மருந்தை அதிகளவு எடுத்துக்கொண்டதன் காரணமாக இறந்துவிட்டார் என்பது மெய்ப்பிக்கப்பட்டாலும், அரசுத்தரப்பு இறந்தவரின் இறப்பு குறித்த குற்றத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை இணைப்பதற்கு வருந்தத்தக்கவகையில் தவறிவிட்டது என்று நாங்கள் கருதுகிறோம்.

**3.<u>உட்கருத்து-</u>**

முன்வைக்கப்பட்ட உட்கருத்தாவது, ஆர்(அ.சா.10) குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவாவுக்கு நெருக்கமானவர், அவர் அவளை அருணுக்கு அறிமுகப்படுத்தினார்;அரசுத்தரப்பால் அமைக்கப்பட்ட வழக்கின்படி, இருவரும் நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் தொலைபேசியிலும், குறுஞ்செய்தி மூலமும் பேசிக் கொண்டிருப்பது வழக்கம்.இது சிவாவுக்கு (1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்) பிடிக்கவில்லை. அதன் பிறகு, மரணமடைந்தவருக்கு அதிகளவு போதை மருந்து கொடுத்து கொல்வதற்கு சந்துரு (2-ஆம்குற்றம் சாட்டப்பட்டவர்) உடன் சேர்ந்து திட்டம் தீட்டினார்.ஆர் (அ.சா.10) தனது வாக்குமூலத்தில்,

அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்கவேவில்லை. அவள் ஒரு போதும் அருணை சந்தித்ததேயில்லை என்பதும், ஆனால், அவனுடன் தொலைபேசியில் எப்போதாவது தான் பேசுவாள் என்பதும் அவளது கூற்றாகும்.அவளும், மரணமடைந்த அருணும் குறுஞ்செய்திகளை பரிமாறிக்கொள்வர், அவை சாதாரணமானவையேயாகும்.அவள் தினந்தோறும் அருணுடன் பேசுவது வழக்கம் என்ற கூற்றை குறுக்கு விசாரணையில் மறுத்து விட்டாள் என்பதையும் அவள் தெரிவித்தாள்.அவர்கள் பொதுவாக கல்லூரி தொடர்பான விசயங்களைத் தான் பேசுவார்கள் என அவள் தெரிவித்துள்ளாள். சிவாவுடனான தனிப்பட்ட தொடர்பு எதனையும் அவள் கொண்டிருந்தாள் என்பதையும் அவள் மறுத்தாள்.சிவா தன்னுடன் கல்லூரியில் படிக்கும் தனது தோழன் என்பது அவளது கூற்றாகும். ஆர்-க்கு (அ.சா.10) சிவாவுடன் ஏதேனும் தனிப்பட்ட தொடர்பு இருந்தது என்றோ அல்லது அவள், மரணமடைந்த அருணுடன் ஏதேனும் தனிப்பட்ட தொடர்பு கொண்டிருந்தாள் என்றோ நிரூபிப்பதற்கு எந்தச் சான்றும் முன்னிடப்படவில்லை. இது குறித்த ஒரே சான்றானது, அரசுத் தரப்பு வழக்கை ஒரு போதும் ஆதரிக்காத ஆர்-இன் (அ.சா.10) வாக்குமூலமேயாகும்.

இதுகுறித்து, அ.சா.1-ஆல் தாக்கல் செய்யப்பட்ட முதல் புகாரில், குற்றஞ்சாட்டப்பட்டவருடனோ அல்லது மரணமடைந்தவருடனோ ஆர் (அ.சா.10) ஏதேனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார் எனக் கூறுமளவுக்கு எந்தக் குறிப்பீடுமில்லை என்பதைக் குறிப்பிடுவதும் உகந்ததாகும்.அருணின் இறப்பிற்குப் பிறகு, நான்கு ஆண்டுகள் கழித்து முதன்முறையாக இப்போது தான் இது புகாரில் கொண்டுவரப்பட்டது. நான்காண்டுகளாக மிகவும் அமைதி காத்து வந்ததற்கான விளக்கமேதுமில்லை. ஆகவே, இந்த உட்கருத்து நிரூபிக்கப்படவில்லை என்று நாங்கள் தெளிவாகவே கருதுகிறோம்.குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், மரணமடைந்தவரும் நல்ல நண்பர்கள் என்பதையும், அவர்கள் பல ஆண்டுகளாக ஒன்றாகப் படித்தவர்கள் என்பதையும், அத்தகைய முக்கோண காதல் பற்றி எள்ளளவு சாட்சியமும் இல்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

4.**<u>சந்துரு என்பவர் மருத்துவ மாணவன்</u>**-

அவருக்குதான் மரணமடைந்தவரின் உடலுக்குள் எப்படி அப்பொருளை உட்செலுத்துவது குறித்து தெரியும் என்பதால் சந்துருவை குற்றம்புரிய சொல்லி சிவா கேட்டுக் கொண்டார் என்ற முடிவுக்கு இரு கீழமை நீதிமன்றங்களும் வந்துள்ளன. கீழமை நீதிமன்றங்களால் வரையப்பட்ட முடிவு முற்றிலும் தவறான அடிப்படையிலானது என்று கருத்தறிவிக்க நாங்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறோம். குற்றஞ்சாட்டப்பட்டவரான சிவா கேட்டுக்கொண்டதனாலேயே சந்துரு மற்றொரு மனிதனை ஏன் கொலை செய்யவேண்டும்?படித்துக்கொண்டிருக்கும் மருத்துவ மாணவனான சந்துரு உயிர்களை காக்கும் தொழிலை செய்வாரேயன்றி, மக்களை கொலை செய்யமாட்டார். மரணமடைந்தவர் போதை மருந்துக்கு அடிமையாகி, நீண்டகாலமாக ஊசி மூலம் போதை மருந்துகளை எடுத்துக்கொண்டு வந்தார் என்பது பதிவாவணத்திலுள்ள சான்றிலிருந்து நிலைநாட்டப்பட்டுள்ளது. அத்தகைய போதைமருந்து பழக்கத்திற்கு அடிமையானவர்கள், தாங்களாகவே எளிதாக ஊசி போட்டுக்கொள்வர் என்பது நன்கு அறியப்பட்டுள்ளது.இவ்வழக்கில் என்ன நிகழ்ந்தது என்பது தெளிவாகவில்லையென்றாலும், சந்துரு அந்த விஷப்பொருளை மரணமடைந்தவரின் உடலுக்குள் செலுத்தினார் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. இது குறித்து சான்றேதுமில்லை.நாம் மேலே விவாதித்ததைப்போன்று, மரணமடைந்த அருணுடன் சென்னைக்கு சிவா மற்றும் சந்துரு மட்டுமின்றி, அதே சீருந்தில் சென்னைக்கு சித்தார்த்தும், மாதேஷும் வந்தனர். இருப்பினும், அவர்கள், சீருந்து விபத்துக்குள்ளான பிறகு தான் திரும்பிச்சென்றனர்.இந்தப் பையன்கள் அனைவரும் தங்கள் பதின்ம வயதைக் கடக்கும் நிலையிலோ அல்லது 20-ஆம் வயதைத் தொட்டுக்கொண்டிருக்கும் நிலையிலோ இருப்பவர்கள், அவர்களில் இருவர் விபத்திற்குப் பிறகு பயந்து, தங்களது உறவினர்களின் வீட்டிற்குச் சென்றுவிட்டனர், அங்கிருந்து அவர்கள் தத்தமது தாயாரை தொடர்பு கொண்டனர். அவர்கள் தவறான சாக்குப்போக்கு சொல்லி தத்தமது தாயாரிடமிருந்து அனுமதி பெற்றிருந்ததால், அவர்கள் பயந்து திரும்பிச் சென்று விட்டனர்.

அரசுத்தரப்பின்படியுங்கூட, சந்துருவுக்கு அருணைக் கொல்லும் உட்கருத்து ஏதுமிருந்ததில்லை.ஆகவே, சிவாவும், சந்துருவும் சதித் திட்டம் தீட்டியிருந்தனர் என்றோ அல்லது அருணை கொல்லும் பொதுவான எண்ணம் கொண்டிருந்தனர் என்றோ விசாரணை நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் வரையப்பட்ட முடிவு, உறுதியான அல்லது நம்பத்தக்க சான்று எதன் மீதும் அடிப்படையானதன்று.

14. மேலே குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர, அரசுத் தரப்புக்கு எதிராக செல்லக்கூடிய மற்ற சூழ்நிலைகளும் உள்ளன, அவற்றை நாம் தற்போது குறிப்பிட வேண்டும்:

1.**அ.சா.1-இன் வாக்குமூலத்திலுள்ள முரண்பாடு** - அ.சா.1, மரணமடைந்தவரின் தாய்மாமா ஆவார். 31.10.2004 அன்று காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட அவருடைய முதல் புகாரில், ஆர் (அ.சா.10)-ஐ பற்றியோ அல்லது பிந்தைய கட்டத்தில் சொல்லப்பட்டுள்ள மற்ற பொருண்மைகளைப் பற்றியோ குறிப்பீடு ஏதுமில்லை. நான்காண்டுகள் கழித்து அவரால் தாக்கல் செய்யப்பட்ட தனிபுகாரானது, சம்பவத்திற்குப் பிறகு, அவரால் உடனடியாக தாக்கல் செய்யப்பட்ட முதல் புகாருக்கு முரணாக உள்ளது. அவரிடம் இரு வெற்றுத் தாள்களில் கையொப்பமிட காவல்துறையினரால் கேட்டுக் கொள்ளப்பட்டது என்பது அவரது விளக்கமாகும். முதலாவதாக, இத்தன்மையான வழக்கில் ஏன் காவல்துறையினர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு உதவி புரிந்து, உண்மையான குற்றவாளியைப் பாதுகாக்க முயல்கின்றனர்? என்பதற்கு காரணம் ஏதும் நாங்கள் காணவில்லை.இரு வெற்றுத் தாள்களில் கையொப்பமிட அ.சா.1 நிர்ப்பந்திக்கப்பட்டார் என்று மரணமடைந்தவரின் தாய்மாமாவான அ.சா.1 அல்லது தந்தையாரான அ.சா.5 முறையிட்டிருந்தனர் என்பதைக் காண்பிக்க சான்றாவணம் ஏதுமில்லை.இவ்வழக்கில் தான் மரணமடைந்தவரின் தாய்மாமாவும், தந்தையும், புலனாய்வை மாற்றுவதற்காக குறைந்தபட்சம் இரண்டு தடவையாவது உயர் நீதிமன்றத்தை அணுகியிருந்தனர்.அவர்கள் ஒருமுறை வெற்றியடைந்து, இரண்டாவதுமுறை தோல்வியடைந்தனர். இரு

வெற்றுத் தாள்களில் அவரது கையொப்பங்கள் பெறப்பட்டன என்ற அ.சா.1-இன் கூற்று ஒரு வேளை சரியாக இருந்தால், அவர் அதைப் பற்றி முன்னரே நிச்சயமாகச் சொல்லியிருப்பார்.அவர் இவ்விசயத்தை உயர் அதிகாரிகளிடமாவது அறிவித்திருப்பார் அல்லது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களிலாவது இது குறித்து குறிப்பிட்டிருப்பார். அசல் புகார்தாரர், தகவல் கொடுத்தவர் மற்றும் அரசு ஆகியோருக்கான கற்றறிந்த வழக்குரைஞரிடம் குறிப்பிடத்தக்க கேள்வியை வைத்த போதும், அவர்கள் அத்தகைய புகார் ஏதும் அ.சா.1 அல்லது அ.சா.5-ஆல் கொடுக்கப்பட்டிருந்ததா? என்பதைக் குறிப்பிட தவறிவிட்டனர்.ஆகவே, அவருடைய கையொப்பங்கள் வெற்றுத் தாள்களில் பெறப்பட்டன என்ற அ.சா.1-இன் கூற்றை நாங்கள் ஏற்கவில்லை. இதுவும் அ.சா.1-இன் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையின் பேரில் சந்தேகத்தைப் பதியச் செய்கிறது.

2.**<u>தனி புகார் தாக்கல் செய்ததிலான தாமதம்</u>** - அ.சா.1-ம், அ.சா.5-ம் வழக்கை வேறேதேனும் புலனாய்வு முகமைக்கு மாற்றக் கோரி உயர் நீதிமன்றத்தை அணுகினர் என்பது உண்மை, ஆனால், அதே சமயத்தில், வெங்கிக்கு எதிராக விசாரணை அலுவலர் (பி.சா.4)-ஆல் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் இதிலுள்ள மேல்முறையீட்டாளர்கள்), குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக வரிசைப்படுத்தப்பட வேண்டும் என்பதாக அ.சா.1 அல்லது அ.சா.5 எவரும் எதிர்ப்பு மனு எதனையும் தாக்கல்செய்யவில்லை. அவர்கள் மேற்கொண்டு வழக்கை நடத்திவந்தனர் என்பதையும், வெங்கி இறந்த பிறகு தான் தனிபுகார் தாக்கல் செய்தனர் என்பதையும் குறிப்பிடுவது உகந்ததாகும். காவல்துறையினர் வெங்கிக்கு எதிராக மட்டுமே, அதுவும் இ.த.ச.,பிரிவு 304-இன் கீழ், கொலை என்றல்லாத ஒரு வழக்கை நிறுவிக்காட்டியிருக்கும்பொழுது, ஏன் எதிர்ப்பு மனு தாக்கல் செய்யவில்லை? என்பதற்கு விளக்கமேதும் அளிக்கப்படவில்லை.

3.**<u>அ.சா.1 மற்றும் அ.சா.5, களங்கமின்றி நீதிமன்றத்திற்கு வரவில்லை</u>**- உட்கருத்தானது நான்காண்டுகள் கழித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மரணமடைந்தவரின் தந்தையாரும், தாய்மாமாவும், முந்தைய கட்டத்தில் எதிலும் ஆர் (அ.சா.10) உடன் மரணமடைந்தவர் உரையாடிக்கொண்டிருந்தார் என்ற பிரச்சினையை ஒருபோதும் கொண்டுவரவில்லை. ஆகவே, அ.சா.1-ம், அ.சா.5-ம் களங்கமின்றி நீதிமன்றத்திற்கு வரவில்லை.அவர்கள் வெற்றுத்தாள்களில் கையொப்பமிட்ட கதையை உருவாக்கி, உட்கருத்து தொடர்பான கதையையும் உருவாக்கினர். ஆகவே, அவர்களுடைய சான்று நம்பத்தக்கதல்ல மற்றும் அத்தகைய சான்றின் அடிப்படையில் ஒரு நபருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட இயலாது.

15. மரணமடைந்தவரும், குற்றஞ்சாட்டப்பட்டவரும் ஒரே அறையில் உறங்கிக் கொண்டிருந்தனர் மற்றும் மரணமடைந்தவர் அதிகளவு போதை மருந்தை எடுத்துக் கொண்டதன் காரணமாக இறந்துவிட்டார் என்பதே மெய்ப்பிக்கப்பட வேண்டும். இப்போதைமருந்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் ஊசி மூலம் உட்செலுத்தினார் என்பதை நிரூபிக்க அரசுத் தரப்பு வருந்தத்தக்க வகையில் தவறிவிட்டது.முதல் ஊசி வெங்கியால் 4 மி.லி.தான் கொடுக்கப்பட்டது என்பது அரசுத்தரப்பின் வழக்கு விவரமாகும். மரணமடைந்தவர் நடு இரவிலோ அல்லது அதிகாலையிலோ எப்போதாவது இரண்டாம் முறையாக தானே ஊசியிட்டுக் கொள்ளும் சாத்தியமுமுள்ளது.இத்தறுவாயில், எங்களுக்கு உதவி புரிந்திருக்க வேண்டிய விசயமான, சடலக்கூறாய்வு நடத்திய மருத்துவர், மரணமடைந்தவர் இறந்த நேரம் குறித்து எதனையும் தோராயமாகக் கூட அளிக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தான் குற்றம் புரிந்தனர் என்ற முடிவுக்குவர, நிரூபிக்கப்பட்ட சூழ்நிலை இட்டுச் செல்லாது.உண்மையில், எங்களால் மேலே விவாதிக்கப்பட்ட மருத்துவச் சான்றிலுள்ள முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டு, மரணம், கொலை தான் என்று அரசுத்தரப்பு கூட சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்கத் தவறிவிட்டது.குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் மரணமடைந்தவருக்கு ஊசியிட்டார் என்பது மற்ற வகையிலுங்கூட நிரூபிக்கப்படவில்லை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தானே ஊசியிட்டுக்கொள்ளும் சாத்தியமிருந்தது

என்பதையோ அல்லது வேறு எவரோ அவ்வாறு செய்திருக்கின்றனர் என்பதையோ விலக்கப்பட முடியாது.

16. நாங்கள், மேற்படியான விவாதத்தினைக் கருத்திற்கொண்டு, அ.வ.எண் 237/2009-இல் சென்னை, V-ஆம் விரைவு நீதிமன்ற கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்களின் 24.09.2010-ஆம் தேதியிட்ட தீர்ப்புரையையும், குற்றவியல் மேல்முறையீடு எண் 592/2010 மற்றும் 636/2010-இல் உயர்நீதிமன்றத்தின் 30.11.2010-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையையும் நீக்கறவு செய்து, இரு மேல்முறையீடுகளையும் அனுமதிக்கிறோம்.குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்-மேல்முறையீட்டாளர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். அவர்கள் வேறெந்த வழக்கிற்கும் தேவைப்படாவிட்டால், உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென பணிக்கப்படுகின்றது. ஏதேனும் விண்ணப்ப(ம்)ங்கள் நிலுவையிலிருப்பின், அது/அவை முடிக்கப்பட வேண்டும். மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டன

**மாண்புமிகு நீதியரசர் திரு.சஞ்ஜய் கிஷன் கவுல்**
**மாண்புமிகு நீதியரசர் திரு.தீபக் குப்தா**

**புதுதில்லி,**
**12.02.2019.**

---

**உரிமைத்துறப்பு**

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "